அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*
கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members
**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

# *DALITISM IN KOOLAMADARI NOVEL*

***V. Savitha**, Ph.D Research Scholar , Dept. Of Tamil, Dr. Sns Rajalakshmi College Of Arts & Science (Autonomous), Coimbatore – 641 049.*

***Dr. C.J. Precilla Sagayamary**, Associate Professor & Head, Dept. Of Tamil, Dr. Sns Rajalakshmi College Of Arts & Science (Autonomous), Coimbatore – 641 049.*

***Abstract***

*The novel has evolved as a tool to depict human life. From the Sangam period to the present day, humans have continued to enslave their fellow beings. This enslavement takes place based on factors such as caste, religion, education, occupation, and economy. Koolamadari the novel, portrays the lifestyle of adolescent boys who are affected by power, selfishness and untouchability as a result of poverty. In Koolamadari, Perumal Murugan vividly presents the lives experiences of goat-herding.*

***Key words:*** *Dalitism, Koolamathari, Perumal Murugan,*

## கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்

**வீ. சவிதா ,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, டாக்டர் எஸ்.என்.எஸ் இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்.

**முனைவர் சி.ஜே.பிரசில்லா சகாயமேரி,** இணைப் பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை, டாக்டர் எஸ்.என்.எஸ் இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்

**ஆய்வுச்சுருக்கம்**

புதினம் என்பது மனித வாழ்க்கையைச் சித்திரித்துக்காட்டும் கருவியாக உருப்பெற்றுள்ளது. சங்ககாலந்தொட்டு இன்றுவரை மனிதன் தனக்குக் கீழ் சக மனிதனை அடிமைப்படுத்திக் கொண்டே வருகிறான். சாதி, மதம், கல்வி, தொழில், பொருளாதாரம் போன்றவற்றுள் ஒன்றினை மையப்படுத்தி அடிமைப்படுத்துதலானது நிகழ்த்தப்படுகிறது. வறுமையின் காரணமாக அதிகாரம், சுயநலம், தீண்டாமை ஆகியவற்றின் மூலம் பாதிக்கப்படும் பதின்பருவ சிறுவர்களின் வாழ்க்கை முறையைக் கூறுவதாக கூளமாதாரி புதினம் அமைகிறது. பெருமாள் முருகனின் கூளமாதாரி என்னும் புதினத்தில் ஆடு மேய்க்கும் சிறுவர்களின் வாழ்வியலை உணர்த்துவதாக அமைகிறது.

**முன்னுரை**

கதை கூறும் இலக்கிய வகையில் ஒன்றாக புதினம் விளங்குகிறது. குடும்பம், அரசியல், சமுதாயப் பின்னணி, சாதிப் பாகுபாடு போன்ற பல்வேறு காரணிகளை அடிப்படையாக வைத்து புதினங்கள் படைக்கப்படுகின்றன. சிவகாமி, பாமா, கே.டேனியல், குணசேகரன் போன்றோர் வரிசையில் பெருமாள் முருகனும் தலித் மக்கள் பற்றிய புதினங்களை எழுதியுள்ளார். தலித் மக்கள் மாற்றங்களை ஏற்படுத்த தம் எழுத்துகளின் மூலம் முயற்சித்து வருகின்றனர். அவ்வகையில் பெருமாள் முருகனின் 'கூளமாதாரி' புதினத்தில் மக்கள் எவ்வாறு அடிமை வாழ்வை வாழ்கின்றனர், பண்ணையகாரரின் அதிகாரம் எவ்வாறு தழைத்தோங்குகிறது, சக மனிதனை சாதியின் பெயரால் எவ்வாறு கீழ்மட்ட நிலைக்குத் தள்ளுகின்றனர் என்பதை விளக்குகிறார். அதேபோல் தாழ்த்தப்பட்டவர்களாக கருதப்படுபவர்கள் வறுமையின் காரணமாக அதிகாரத்திற்கு உட்பட்டும் தங்கள் மீது தவறு இல்லாத சூழலிலும் எதிர்க்காமல் அமைதியாகவே இருக்கின்றனர். பண்ணையக்காரர்களை எதிர்க்கும் நிலை வரும்பொழுது அதிகாரத்தினைக் கையிற்கொண்டு பண்ணையக்காரர்கள் தலித் மக்களை எவ்வாறு அடக்கி வைத்துள்ளனர் என்பதை இக்கட்டுரை ஆய்வதே நோக்கமாகிறது.

**ஆய்வு நோக்கம்**

பெருமாள்முருகனின் 'கூளமாதாரி' என்னும் புதினத்தில் ஆடு மேய்க்கும் பதின்ம வயது தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த சிறுவர்களின் வாழ்க்கை முறையானது விளக்கப்படுகிறது. அச்சிறுவர்கள் பண்ணையக்காரர்களின் அதிகாரத்தின்பால் ஒடுக்கப்படுகின்ற நிலையை ஆராய்வ இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருதுகோள்**

'கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்' என்னும் இக்கட்டுரையானது சாதி என்னும் கட்டமைப்பிற்குள் சிக்குண்ட தாழ்த்தப்பட்ட சிறுவர்களின் வாழ்க்கை நிலையை ஆராய்கிறது. மேலும் சாதி மற்றும் அதிகாரத்தின் தாக்கத்தால் இச்சிறுவர்களின் மனம் மற்றும் உடல் சார்ந்த பாதிப்பை இக்கட்டுரையானது எடுத்துரைப்பதாக உள்ளது.

**திறவுச் சொற்கள்:** தலித்தியம், கூளமாதாரி

**தலித் இலக்கியம்**

தலித் என்ற சொல்லானது மராட்டிய மொழியிலிருந்து உருப்பெற்றது. தலித் என்னும் சொல்லானது தமிழில் திருக்குலத்தார், பழந்தமிழர், ஆதி திராவிடர், தாழ்த்தப்பட்டோர், தீண்டத்தகாதோர், பறையர், புலையர், பஞ்சமர், அட்டவணை இனத்தவர், சண்டாளர், வருணத்தார் என்றெல்லாம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது 'ஒடுக்கப்பட்ட மக்கள்' என்றும் 'தாழ்த்தப்பட்ட மக்கள்' என்றும் 'தலித்துகள்' என்றும் வழங்கப்பட்டு வருகிறது. இதனை

**“தலித் என்ற சொல் தாழ்த்தப்பட்ட சில சாதிகளின் கூட்டு வடிவ இலச்சனையாகவும் ஒரு பண்பாட்டு அரசியலில் அடையாளமாகவும் இருக்கின்றது”**

(திறனாய்வுக்கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும் ப-141)

என்று தி.சு.நடராஜன் அவர்கள் விளக்குகிறார். வர்க்கத்தின் அடிப்படையில் தொழில் அல்லது தினக் கூலிகளாகவும் சாதியின் அடிப்படையில் உரிமை மறுப்பு, தீண்டாமை ஆகிய காரணத்தினாலும் மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாக மாற்றப்படுகின்றனர்.

தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களில் உழைக்கும் மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே சித்திரிக்கப்படுகின்றனர். அவர்கள் பெரும்பாலும் ஏவல் தொழிலினை மேற்கொள்பவர்களாகவும் இருக்கின்றனர். கல்வி போன்ற அடிப்படை உரிமைகள் வழங்கப்படாமலும் சுரண்டலுக்கு ஆட்பட்டும் தங்கள் வாழ்வை நடத்தி வந்தனர்.

**“நூலே கரகம் முக்கால் மனையே**

**ஆயும் காலை அந்தணர்க்கு உரிய”**

(தொல்.மரபு, நூ. 615)

**“படையும் கொடியும் குடையும் முரசும**

**…… …… …… ……….. …**

**தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய”**

(தொல்.மரபு, நூ. 616)

**“வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை”**

(தொல்.மரபு, நூ. 622)

**“வேளாண் மாந்தர்க்கு உழுதுஊண் அல்லது**

**இல் என மொழிப…… ……”**

(தொல்.மரபு, நூ. 625)

இவ்வாறு தொல்காப்பியர் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியோரை உயர்ந்தோராகவும் மற்றவர்களை உயர்ந்தோர் அல்லாதவராகவும் கட்டமைக்கிறார்.

**உரிமை மறுப்பு**

மனிதனுக்கு அவசியமானதாக விளங்குவது உணவும் உடையுமாகும். அன்றாடம் உண்ணும் உணவினை வைத்து உணவு அரசியலானது தழைத்தோங்குகிறது. பன்றி, மாட்டு இறைச்சியை உண்பவர் தாழ்த்தப்பட்டவராகக் கருதப்படுகின்றனர்.

**"நெருக்கடி மிகுந்த சேரி, சாக்கடை நாற்றம், ஆரோக்கியமற்ற குடிசைகள,; பன்றிகள், மாட்டுக்கறிகள்... என்று இப்படிப் பல வார்த்தைகளோடு/சூழல்களோடு இந்தக் கருத்து கட்டமைக்கப்படுகிறது"**

(தமிழ் இலக்கிய திறனாய்வு வரலாறு ப.144)

இவ்வாறாக தலித் மக்களின் உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்துக் கட்டமைக்கின்றனர். இப்புதினத்தில் பண்ணையகாரர்களிடம் வருட கூலிக்கு வேலை செய்யும் சிறுவர்களுக்குப் போதிய உணவினைக் கொடுக்காமலும் நைந்து போன அல்லது கெட்டுப்போன உணவினை அளிக்கின்றனர். வறுமையின் காரணமாகவும் பசியின் காரணமாகவும் அவ்வுணவை உண்ணும் நிலை ஏற்படுகிறது. தேவைக்கேற்ப உணவு வேண்டும் என்பதைக் கேட்கும் அளவிற்கு உரிமை மறுப்பும் உண்டாகிறது. பண்ணையகாரர்களின் இச்செயலானது அவர்களிடம் மட்டுமல்லாமல் அவர்களின் குழந்தைகளான செல்வம், மணி ஆகியோரிடமும் காணப்படுகிறது.

**தீண்டாமை**

மனித உறவுகளுக்குள் சாதியின் அடிப்படையில் பிளவு உண்டாவதற்கு தீண்டாமை முக்கியப்பங்கு வகிக்கிறது. பள்ளி பாடப் புத்தகத்தில்,

**"தீண்டாமை ஒரு பாவச் செயல்**

**தீண்டாமை ஒரு பெருங்குற்றம்"**

என்னும் வரிகளானது முதல் பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும். ஆனால் இன்றைய சூழலில் தீண்டாமையானது மனித மனதில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தீண்டாமை ஒழிந்துவிட்டது என்று ஒரு சிலர் கூறினாலும் அதனை அப்படியே ஏற்க இயலாது. ஏனெனில் இன்றைய சூழலில் படித்த மாணவர்களிடம் இத்தகைய பாகுபாடு பார்க்கும் பழக்கம் பரவி கிடக்கிறது. அது போலவே கூளமாதாரி புதினத்தில் வரும் செல்வம் என்னும் சிறுவன் அதிகாரம் உடையவனாகவும் தீண்டாமை என்னும் கொடுஞ்செயலை செய்பவனாகவும் உருவெடுத்துள்ளான். சிறுவர்களுடன் விளையாடினாலும் அவர்களைத் தொட செல்வன் அனுமதிப்பதில்லை. நண்பர்களைப் போல் சாதாரணமாக கூளையன், செவிடி, வவுறி, நெடும்பன் ஆகியோரிடம் பழகினாலும் அதிகாரம் அவனது அனைத்து செயல்களிலும் வெளிப்பட்டுவிடும். ஆனால் சில சமயங்களில் செல்வன் தனது தேவைக்காக சிந்திக்கும் பொழுது மட்டும் இத்தகைய கட்டுப்பாட்டினை உடைத்து வெளிவருவான். அவன் ஆடுகளுக்கு பட்டி போடும் இடத்தில் இருள் சூழ்ந்து கருமை நிறம் அடர்ந்துவிட்டால் பயத்தில் கூளையனைத் தன்னுடன் படுத்துக்கொள்ளுமாறு கூறிவிடுவான். உணவு பரிமாறும் போது பாத்திரத்தை கம்பால் திறந்து மூடுவான்.

ஆனால் தனக்குத் தேவையான பொழுது அப்பாத்திரத்தில் வாய் வைத்து கள் குடிப்பது போன்ற நிகழ்வுகள் நடக்கிறது. இதன்வழி தீண்டாமை என்னும் கெடுஞ்செயலானது நடக்கிறது என்பதை அறிய முடிகிறது.

**அதிகாரம்**

சமுதாயத்தில் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் அதிகளவில் காணப்படுகின்றன. அதனைத் தகர்க்க ஒரு சாரார் பெரும் முயற்சியை மேற்கொள்கின்றனர். இருப்பினும் அம்முயற்சியானது முற்றிலும் முழுமை பெறவில்லை. ஆதிக்கக் குரலுக்கு எதிர் முழக்கம் கொடுக்காமல் அடிபணிந்து செல்கின்றனர். ஏதேனும் ஒரு நிலையில் தன்னை மீறிய செயல் வெளிப்பட்டாலும் அதனை, அடக்கிக் கொண்டு அடிமை வாழ்வை வாழ்கின்றனர். வறுமை, குடும்ப சூழல், சமுதாயம் போன்ற இக்கட்டான சூழ்நிலைகளில் சிக்கி, முடங்கி இருக்கும் நிலையானது இவ்விடத்து நிலவுகிறது. அதுபோலவே ஆடு மேய்ப்பவர்களான கூளையன், நெடும்பன், வவுறி, செவிடி போன்றோரும் தங்களின் குடும்பச் சூழலைக் கருத்திற்கொண்டு கூறும் அனைத்து வேலைகளையும் செய்கின்றனர்.

நெடும்பனுடைய பண்ணையக்காரரின் அப்பாவிற்கு எழுந்து நடமாட முடியாத சூழலில் நெடும்பனே அவருடைய அனைத்து வேலைகளையும் செய்கிறான். அவரைக் குளிக்க வைப்பது, சிறுநீர், மலம் முதலியவற்றை அகற்றுவது போன்ற வேலைகளைத் தினசரி செய்து வருகிறான். ஒரிரு நாட்கள் நெடும்பன் வரவில்லை என்றால் அவரைக் கவனிக்க ஆளில்லாமல் பண்ணையார் சிரமத்திற்கு உள்ளாவார். இருப்பினும் அவர் அவனைக் கடுமையான சொல்லால் வசைபாடுவார். அதேபோல் மற்றவர்களும் அதிகாரத்தினால் வேறு வழியில்லாமல் அடிமை வாழ்வை வாழ்கின்றனர். பதின்ம வயது சிறுவர்களின் அதிகாரமானது ஆடு மேய்க்கும் காட்டில் ஆடுகளிடமோ அல்லது சக நண்பர்களிடமோ வெளிப்படும் சூழல் புதினத்தின் பல இடங்களில் வெளிப்படுகின்றன. அதிகாரமானது தனக்கு கீழ் இருப்பவர்களிடம் அல்லது சக மனிதர்களிடம் மட்டுமே தழைத்தோங்குகிறதோ தவிர, நம்மை அடிமைப்படுத்த முற்படுபவர்களிடம் ஒருபோதும் நிலைப்பதில்லை என்பதை ஆசிரியர் கூறுகிறார்.

**முடிவுரை**

சமுதாயத்தில் சில காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அடிமைப்படுத்தலானது நிகழ்த்தப்படுகின்றன. ஆடு மேய்க்கும் பெருவெளியில் கிடைக்கும் சுதந்திரமும் மற்றவர்களிடம் மனம் விட்டுப் பேசும் சூழ்நிலையும் அவர்களுக்கு ஆதரவளிப்பதாக அமைகின்றன. ஆடுகளுடன் உரையாடுவது அவற்றைத் தன் அதிகாரத்தின் பேரில் அடக்க உட்படுவது போன்ற செயல்கள் மகிழ்ச்சியைத் தருவதாக அமைகிறது. வறுமையின் காரணமாகவும் தன் குடும்பத்திற்காகவும் சிறுவயதிலேயே உழைக்கும் நிலை ஏற்படுகிறது. பெரும்பாலான மக்கள் நாம் ஏன் அடிமையாக வாழ்கிறோம் என்பதை உணராமலேயே வாழ்ந்து வருகின்றனர். சங்க காலம் தொட்டே உயர்த்தப்பட்ட சாதியாகத் தங்களை கருத்திக் கொள்ளும் மனிதர்கள் கல்வி எனும் அடிப்படை உரிமையை மறுத்து, மறைத்து தலித்துகளை உருவாக்குகின்றனர். தொழில், சாதி போன்ற காரணிகளால் தீண்டாமை, அதிகாரம், உரிமை மறுப்பு ஆகியவற்றை மையமிட்டுக்கொண்டு அடிமைப்படுத்துதல் நிகழ்கின்றன. தலித் மக்களுக்கான சட்டம், இட ஒதுக்கீடு,

உதவித்தொகை, இலவசக்கல்வி போன்றவற்றை அரசு ஏற்படுத்தி சமநிலையை உருவாக்க முயல்கிறது. அனைவரும் சமம், சமமான கல்வி, சமமான நில உரிமை போன்ற காரணிகளின் மூலம் தலித் என்ற சொல்லானது அழிந்து எதிர்காலத்தில் சமநிலை உருவாகும் சூழ்நிலை ஏற்படும்.

**பின்னிணைப்புகள்**

1. தி.சு. நடராசன், திறனாய்வுக் கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ்

2. பேராசிரியர் திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம்

3. முனைவர் க. பஞ்சாங்கம், தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அன்னம் - அகரம் பதிப்பகம்

***Annexure***

1. *T.S. Natarajan, Thiranaivu kalai kolgaigalum anugumuraigalum, NCBH.*
2. *Dr. Thirunanasambantham, Tholakappiyam porulathikaram mulamum uraiyum, Kathir publisher.*
3. *Dr. K. Panjangam, Tamil elakkiya thiranaivu varalaru, Annam — Agaram publisher*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com